# அனர்த்த முகாமைத்துவச் செயற்பாடுகளில் நிறுவனங்களின் பங்களிப்பு – யாழ்ப்பாண மாவட்டத்தைச் சிறப்பாகக்கொண்ட ஆய்வு

**விநாயகமூர்த்தி மதிவதனி**

**ஆய்வுச் சுருக்கம்**

அனர்த்த முகாமைத்துவச் செயற்பாடுகள் உலக நாடுகளில் சிறந்த முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற அதேநேரம் இலங்கையில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் அனர்த்த முகாமைத்துச் செயற்பாடுகள், முயற்சிகள் போன்றன குறைந்த அளவிலேயே காணப்படுகின்றன. இதனால் இப்பிரதேசத்தில் அனர்த்த முகாமைத்துவச் செயற்பாடுகளை முன்னெடுப்பது அவசியமாக உள்ளது. இதற்கு நிறுவனங்களின் நூறு வீதமான வினைத்திறனான செயற்பாடுகள் முக்கிய தேவையாகவும் அவசியமானதாகவும் உள்ளது. அனர்த்த முகாமைத்துவம் என்பது தனியொரு துறையினை மட்டும் பிரதிநிதித்துவப்படுத்தாமல் பல துறைகளினை உள்ளடக்கியதாக இருக்கின்றது. இதன் காரணமாக அனைத்து துறைகளினையும் உரிய நேரத்தில் இணைத்து செயற்படுவதற்கு இந்நிறுவனங்களின் பங்களிப்பானது இன்றியமையாத அம்சமாக இருக்கின்றது. இதனால் நிறுவனங்களின் அனர்த்தத்திற்கு முன்னரான மற்றும் அனர்த்தத்திற்குப் பின்னரான நடவடிக்கைகளில் அவற்றின் பங்களிப்பினை அறிந்துகொள்ளல், அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகளில் ஈடுபடும் நிறுவனங்கள் எதிர்கொள்ளும் சவால்களை அடையாளங்காணல், அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்கான திறமுறைகளை முன்வைத்தல் என்பவற்றை நோக்காகக்கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 1.0 அறிமுகம்

அதியுச்ச தொழில்நுட்ப வளர்ச்சியினாலும், இலத்திரனியல் வளர்ச்சியினாலும் புதுமைகளை ஒவ்வொரு கணமும் விளைவித்துவரும் இந்நூற்றாண்டில் மக்கள் வாழ்வு மூழ்கிக் கிடக்கும் அதேவேளை இன்னும் ஒருபுறத்தே இயற்கையின் சீற்றத்தினால் உருவாகும் இயற்கைப் பேரிடர்களாலும் அதன் உச்ச நிலையை எதிர்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளது. இந்த இரு வகையான தன்மைகள் மட்டுமல்லாது மனிதன் தனது செயற்கையினாலும் உருவாக்கப்படுகின்ற சுற்றுச்சூழல் பாதிப்புக்களினாலும் செயற்கை இடர்பாடுகளாலும் மீள முடியாத பேரவலத்திற்குள் விழுவதும் கண்கூடாகின்றது. இது இன்றைய மனித சமுதாயம் ஒட்டுமொத்தமாக எதிர்கொள்ளும் ஒரு வாழ்வியல் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. இத்தகைய அனர்த்தங்களுக்குப் பின்னால் அபிவிருத்திப் பாதைக்குள் விரிவுபட்ட பரிமானங்கள் பல நாடுகளில் பரீட்சித்துப் பார்க்கப்பட்டுள்ளன. அதன் பொருளாதார மாற்றங்கள், பொது நிதி, தகவல் பரிவர்த்தனம், சுற்றுச்சூழல் பாதிப்புக்கள் மற்றும் கலாசார சமூகக் கட்டமைப்பு என அனர்த்தங்களால் மாற்றப்பட்ட வரலாற்றுப் பாடங்கள் இவர்களின் மீள் உருவாக்கத் தேடலில் முக்கிய பங்கு வகிக்கின்றது எனலாம். இவ்வாறாக அனர்த்தங்களின் பாதிப்புக்களிலிருந்து விடுபடுவதற்கு அல்லது பாதிப்புக்களைக் குறைத்துக்கொள்வதற்கு அனர்த்த முகாமைத்துவம் என்பது அவசியமாக உள்ளது. வினைத்திறனான அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகளுக்கு நிறுவனங்களின் பங்களிப்பு என்பது இன்றியமையாத விடயமாக இருக்கின்றது.

அந்தவகையில் யாழ்ப்பாணக் குடாநாடும் பல்வேறு இயற்கை அழிவுகளுக்கு காலத்திற்குக் காலம் முகம் கொடுத்து வருகின்றது. குறிப்பாக யாழ் நகரப்பகுதிகளில் சில இடங்களிலிலும் அதனை அண்டிய கரையோரத் தாழ்நிலப் பிரதேசங்களிலும் அடிக்கடி அனர்த்தங்கள் ஏற்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் அனர்த்தங்களை உயர்ந்த மட்டத்தில் தோற்றுவிக்கும் வளிமண்டலவியல் காரணிகளாக தொடர்ச்சியான மழைவீழ்ச்சி, வங்களா விரிகுடாவில் ஏற்படும் தாழமுக்க மையம், சூறாவளிகளின் தோற்றம், புயற்காற்று போன்ற பல காணப்படுகின்றன. யாழ்ப்பாணப் பிரதேச அனர்த்த முகாமைத்துவம் சரிவர நடைமுறைப்படுத்துவதாகத் தெரியவில்லை. இதற்கு சரியான தகவல்கள் திரட்டப்பட்டு முகாமைத்துவச் செயற்பாடுகள் உரிய காலத்தில் நடைமுறைப்படுத்தப்படாமையே முக்கிய காரணமாகும். எனவே இவ் ஆய்வு யாழ்ப்பாண பிரதேச அனர்த்த முகாமைத்துவச் செயற்பாடுகளில் நிறுவனங்களின் பங்களிப்பினை அறிதல் என்பதை நோக்காகக்கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அனர்த்த முகாமைத்துவச் செயற்பாடுகள் உலக நாடுகளில் சிறந்த முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற அதேநேரம் இலங்கையில் அனர்த்த முகாமைத்துச் செயற்பாடுகள், முயற்சிகள் போன்றன குறைந்த அளவிலேயே காணப்படுகின்றன.

குறிப்பாக இப் பிரதேசங்களில் அனர்த்தம் வந்ததன் பின்னரே அனர்த்த முகாமைத்துவச் செயற்பாடுகள், முயற்சிகள் பற்றிச் சிந்திக்கின்ற தன்மை காணப்படுகின்றது. இத்தன்மையானது மக்களிடத்திலும் சரி, நிறுவனங்களிடத்திலும் சரி, காணப்படுகின்றது.

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் ஒப்பீட்டளவில் அனர்த்த முகாமைத்துவச் செயற்பாடுகள் குறைவாகக் காணப்படுவதனால் இப்பிரதேசத்தில் அனர்த்த முகாமைத்துவச் செயற்பாடுகளை முன்னெடுப்பது அவசியமாகும். இதற்கு நிறுவனங்களின் பங்கு முக்கிய தேவையாக உள்ளது. அனர்த்த முகாமைத்தும் என்பது தனியொரு துறையினை மட்டும் பிரதிநிதித்துவப்படுத்தாமல் பல துறைகளினை உள்ளடக்கியதாக இருக்கின்றது. இதன் காரணமாக அனைத்து துறைகளினையும் உரிய நேரத்தில் இணைத்து செயற்படுவதற்கு இந்நிறுவனங்களின் பங்களிப்பானது இன்றியமையாத அம்சமாக இருக்கின்றது. இந்நிறுவனங்களின் பங்களிப்பு என்பது அரச, அரச சார்பற்ற மற்றும் சமுதாயத்தினை அடிப்படையாகக்கொண்ட நிறுவனங்களின் பங்களிப்பினை உள்ளடக்கியதாக இருக்கின்றது.

**2.0 ஆய்வுப் பின்னனி**

அனர்த்தங்களினால் ஏற்படும் பாதிப்புக்களைக் குறைத்துக்கொள்வதற்காக அனர்த்த முகாமைத்துவம் என்ற கருத்தினை உலக நாடுகள் தோற்றுவித்து நடைமுறைப்படுத்தி வருகின்றன. இந்த நிறுவனக் கட்டமைப்பானது தனி ஒரு துறையினை மட்டும் பிரதிநிதிப்படுத்தாமல் நாட்டில் காணப்படுகின்ற அனைத்து துறைகளையும் உள்ளடக்கிய நிறுவனக் கட்டமைப்பாக இருக்கின்றது. ஏனெனில் அனர்த்தமானது தனியொரு துறையினை மட்டும் பாதிப்புக்கு உட்படுத்தாமல் அனைத்து துறைகளையும் பாதிப்படையச் செய்கின்றது.

இந்த அனர்த்த முகாமைத்துவ கட்டமைப்பானது பொதுவாக நாடுகளின் தேசிய, பிராந்திய, கிராமிய மட்டங்களில் செயற்படுத்தப்படுகின்றது. அதாவது நாட்டின் மிக உயர்ந்த மட்டம் தொடக்கம் மிகச் சிறிய மட்டம் வரைக்கும் செயற்படுத்தப்படுவதனைக் குறிக்கும்.

இந்த அனர்த்த முகாமைத்துவக் கட்டமைப்பானது அனர்த்தம் தொடர்பில் அனைத்து செயற்பாடுகளையும் முன்னெடுக்கின்றது. குறிப்பாக ஒரு பிரதேசத்தில் என்னென்ன அனர்த்தங்கள் ஏற்படுகின்றன, அனர்த்த பாதிப்புக்களை மதிப்பீடு செய்தல், தேவையான நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்ளல், அனர்த்தப் பாதிப்பு இடங்களினை அடையாளங்காணல், அனர்த்தங்களைக் குறைப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளல் (Early Warning System), அதற்குரிய ஆயத்தங்களை மேற்கொள்ளல், நீண்ட கால நோக்கில் அனர்த்தப் பாதிப்பினைக் குறைக்கும் பொருத்தமான கட்டுமானங்களினை மேற்கொள்ளல், பல்வேறுபட்ட நிறுவனக் கட்டமைப்புக்களை ஒருங்கிணைத்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. உலகளாவிய ரீதியில் அனர்த்த முகாமைத்துவச் செயற்பாடுகளில் பொறுப்புடன் ஈடுபடுகின்ற மிகவும் பிரபலமான நிறுவன அமைப்புக்கள் சில கீழ்வருமாறு:

- டுர்யாக் நிவாரன் (DuryogNivaran (DN)
  இந்த வலையமைப்பானது உலகின் அதிக அனர்த்த ஆபத்துள்ள இடங்களில் பணியாற்றும் நிறுவனங்கள், அரசாங்கம் மற்றும் வேறு நிறுவனங்கள் அவர்களின் அனுபவங்களை பகிரும் நோக்குடனும் அவர்களுக்கிடையில் உள்ள இடைவெளிகளைத் தீர்ப்பதற்காகவும் உருவாக்கப்பட்டது.

- ஆசிய அனர்த்த முன்னாயத்த மையம்
  இந்நிறுவனம் ஓர் முன்னனி வள நிறுவனமாக உள்ளது. இது ஆசிய பிராந்தியத்தில் அனர்த்த ஆபத்துக் குறைப்பு மற்றும் நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி தொடர்பாக பணியாற்றுகின்றது.

- ஆசிய அனர்த்த குறைப்பு மையம் (ADRC)
  ஆசிய அனர்த்த குறைப்பு மையம் 1998ஆம் ஆண்டு கோப் எனும் இடத்தில் அரம்பிக்கப்பட்டது. இதன் பிரதான நோக்கமாக பங்காளர் நாடுகளில் உள்ள மக்களின் அனர்த்த மீளும் திறனை அதிகரிப்பது, பாதுகாப்பான சமூகத்தை உருவாக்குவது மற்றும் நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தியை உருவாக்குவது.

- ஐக்கிய நாடுகள் சபையின் அனர்த்தக் குறைப்புக்கான சர்வதேச மூலோபாயம் (UNISDR )

இது அனர்த்தக் குறைப்புக்கான சர்வதேச மூலோபாயத்தின் செயலகமாக உள்ளது. இது 1999ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இது ஐக்கிய நாடுகள் சபையின் அனர்த்தக் குறைப்புக்கான சர்வதேச மூலோபாயத்தை அமுலாக்குவதை உறுதி செய்யும் ஓர் பிரிவாக உள்ளது.

- வெள்ள இடர் ஆராய்ச்சி மையம்
  மிடில் செக்ஸ் பல்கலைக்கழகம், ட்ரென்ட் பார்க் வளாகம் சுகாதார மற்றும் சமூக விஞ்ஞான பாடசாலை என்பவற்றுடன் இணைந்து வெள்ள இடர் ஆராய்ச்சிகளை மேற்கொண்டுவருகின்றது.

- அனர்த்த முகாமைத்துவ தேசிய நிறுவனம், இந்தியா
  திறன் அபிவிருத்திக்கென உயரிய நிறுவனமாக பாராளுமன்ற சட்டத்தின் மூலம் இந்தியா மற்றும் அதன் பிராந்தியங்களுக்காக அமைக்கப்பட்டது.

- சர்வதேச நில அதிர்வு மையம்
  இதன் பிரதான நோக்கம், கிடைக்கக்கூடிய தகவல்களை வைத்து நில அதிர்வு ஏற்படும் இடங்களை தேடுவது ஆகும். இதன் முடிவுகள் அச்சு மற்றும் CD வடிவில் பெறக்கூடியதாக உள்ளது. விசேட ஆலோசனைகளை வழங்கும் மையமாகவும் செயற்படுகின்றது.

- உலக வானிலை ஆராய்ச்சி நிறுவனம் (WMO )
  இது ஐக்கிய நாடுகள் சபையின் ஓர் விசேட அமைப்பாகும். இது வளிமண்டலத்தின் நடத்தை, அதன் சமுத்திரத்திரத்திற்குள்ள தொடர்பு, காலநிலை, அதன் நீர் வளப் பரம்பல் போன்றன தொடர்பாக உத்தியோக பூர்வ குரலாக செயற்பட்டுவருகின்றது.

- பூகம்ப பொறியியல் தேசிய தகவல் மையம்
  பூகம்ப அனர்த்தத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளையும் அது தொடர்பான தரவு தளத்தைப் பேணி, பயனாளிகளுக்கு பரப்புகின்ற செயற்பாடுகளில் ஈடுபடுகின்றது.

இவ்வாறாக உலகளாவிய ரீதியில் அனர்த்த முகாமைத்துவக் கட்டமைப்பானது பல்வேறு நிலைகளில் செயற்பட்டுவருகின்றன. இத்தகைய அனர்த்த முகாமைத்துவ கட்டமைப்பானது இலங்கையிலும் காணப்படுகின்றது. அந்த வகையில் அதன் செயற்பாட்டுத் தன்மையினை எடுத்து நோக்குகின்றபோது இலங்கையில் அனர்த்த முகாமைத்துவம் என்ற கட்டமைப்பானது சுனாமிப் பேரலையின் தாக்கத்தினைத் தொடர்ந்து உருவாக்கப்பட்ட கட்டமைப்பாக இருக்கின்றது.

இந்த அனர்த்த முகாமைத்துவ கட்டமைப்பானது 2005ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி இலங்கை பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட 13ஆம் இலக்க அனர்த்த முகாமைத்துவ சட்டத்தின் பிரகாரம் அனர்த்த முகாமைத்துவ தேசிய பேரவையானது உருவாக்கப்பட்டது. இந்த பேரவையானது நாட்டிலுள்ள அனைத்து அமைச்சுக்களுடனும் தொடர்புபட்டதோடு இதன் பிரதான தலைவராக ஜனாதிபதியும், உப தலைவராக பிரதம மந்திரியும், மாகாண அமைச்சர்களினையும், எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களையும் கொண்டதாக இப் பேரவை இருக்கின்றது. இப்பேரவையின் ஊடாகத்தான் அனர்த்த முகாமைத்துவத்திற்கு தேவையான அனைத்து செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றது. குறிப்பாக நிதி ஒதுக்கீடு, ஏனைய வளப்பகிர்வு போன்ற அம்சங்களை உள்ளடக்கியுள்ளது. இப்பேரவையானது அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான செயற்பாட்டுக்குப் பொறுப்பாக இருக்கின்ற அதேநேரம் அனர்த்த முகாமைத்துவ நிலையம் என்பது உருவாக்கப்பட்டு குறித்த நடவடிக்கைகளானவை முன்னெடுக்கப்படுகின்றன. தேசிய, பிராந்திய, மாவட்ட நிலைகளில் இதனது செயற்பாடானது பரந்துபட்டதாக இருக்கின்றது. மாவட்ட மட்ட அனர்த்த முகாமைத்துவ கட்டமைப்பானது அரசாங்க அதிபரினைத் தலைவராகவும், மற்றும் மாவட்ட மட்ட கிளைத் தலைவர்களினையும் உள்ளடக்கியதாக இருக்கின்றது. பிரதேச மட்ட அனர்த்த முகாமைத்துவ கட்டமைப்பானது பிரதேச செயலாளரினை தலைவராகவும், மற்றும் கிளைத் தலைவர்களினையும் உள்ளடக்கியதாக இருக்கின்றது. கிராமிய மட்ட அனர்த்த முகாமைத்துவ கட்டமைப்பானது கிராம உத்தியோகத்தரைத் தலைவராகவும், மற்றும் கிராமத்தில் வசிக்கும் தன்னார்வலர்களினையும் உள்ளடக்கியதாக இருக்கின்றது. இவ்வாறாக அனர்த்த முகாமைத்துவ நிர்வாகக் கட்டமைப்பானது காணப்படுகின்றது.

இவ்வாறாக பல அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகளில் நிறுவனங்களினுடைய பங்களிப்பு என்பது காணப்படுகின்றது. இவை அமைச்சுக்கள், மத்திய அரச அமைச்சுக்கள், பொதுக் கூட்டுத் தாபனங்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி அதிகார நிர்வாகம், அவ்வாறே மாவட்ட, பிரதேச, கிராம சேவகர் நிர்வாகம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் செயற்பட்டு வருகின்றன. அவ்வாறான செயற்பாடுகளாக,

- அனர்த்த இடர் மதிப்பீடு, தரவுகள் சேகரித்தல், ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுகளை மேற்கொள்ளல்.
- அனர்த்த முகாமைத்துவ தொழில்நுட்பம், அனர்த்த இடர் குறைப்பு மற்றும் தணித்தல் செயற்பாடுகள், எதிர்வு கூறுதலும், முன்னெச்சரிக்கை விடுதலும்.
- அனர்த்தத்தின் போதான அவசரகால தொழிற்பாடுகளில் ஈடுபடுதல்.
- தேசிய, மாவட்ட, பிரதேச மற்றும் கிராம சேவகர் மட்டங்களில் தயார் நிலைத் திட்டமிடுதல்.
- பயிற்சியளித்தல், அறிவூட்டல் மற்றும் பொது விழிப்பூட்டல்.
- தேசிய அனர்த்த முகாமைத்துவத் திட்டத்தையும், அவசர கால தொழிற்பாட்டுத் திட்டத்தையும் வகுத்து நடைமுறைப்படுத்தல்.
- அனர்த்தங்கள் பற்றிய வரைபடங்களை வரைதல், இடர் மதிப்பீடு, அனர்த்தம் தணிப்பு, அனர்த்த தயார் நிலை, அவசரகால தொழிற்பாடுகளின் முகாமைத்துவம் மற்றும் அனர்த்தத்திற்குப் பிந்திய செயற்பாடுகள் ஆகியவை தொடர்பான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல், ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் கண்காணித்தல்.
- இயற்கை அனர்த்தங்களுக்கான முன்னெச்சரிக்கைகளை வழங்குதல் மற்றும் அத்தகைய எச்சரிக்கைகள் பாதிக்கப்படக்கூடிய மக்களுக்கு உரிய காலத்தில் பரப்புதல் பற்றிய விடயங்களில் அதிகாரமளிக்கப்பட்ட தொழில்நுட்ப முகவராண்மைகளுடன் ஒருங்கிணைத்தல்.
- அனர்த்தங்களின் போது அவசர கால பதில் நடவடிக்கைகள், நிவாரணம் மற்றும் மீளல் நடவடிக்கைகளில் ஒருங்கிணைப்புச் செய்தலும், வசதியளித்தலும்.

எனப் பலவகையான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றன.

எனினும் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் காலத்திற்குக் காலம் பல அனர்த்தங்கள் ஏற்படுகின்ற போதிலும், ஒப்பீட்டளவில் அனர்த்த முகாமைத்துவச் செயற்பாடுகள் குறைவாகக் காணப்படுவதனால் இப்பிரதேசத்தில் அனர்த்த முகாமைத்துவச் செயற்பாடுகளை முன்னெடுப்பது அவசியமாகும். இதற்கு நிறுவனங்களின் பங்கு முக்கிய தேவையாக உள்ளது. அனர்த்த முகாமைத்துவம் என்பது தனியொரு துறையினை மட்டும் பிரதிநிதித்துவப்படுத்தாமல் பல துறைகளினை உள்ளடக்கியதாக இருக்கின்றது. இதன் காரணமாக அனைத்து துறைகளினையும் உரிய நேரத்தில் இணைத்து செயற்படுவதற்கு இந்நிறுவனங்களின் பங்களிப்பானது இன்றியமையாத அம்சமாக இருக்கின்றது. இந்நிறுவனங்களின் பங்களிப்பு என்பது அரச, அரச சார்பற்ற, தனியார் மற்றும் சமுதாயத்தினை அடிப்படையாகக்கொண்ட நிறுவனங்களின் பங்களிப்பினை உள்ளடக்கியதாக இருக்கின்றது.

### 3.0 ஆய்வின் நோக்கம்

இன்றைய உலகில் அனர்த்தங்கள் அடிக்கடி ஏற்பட்ட வண்ணம் இருக்கின்றன. இதனால் மனித இழப்புக்கள், சொத்திழப்புக்கள், மற்றும் இயற்கை வளங்கள் பெருமளவு அழிவடைந்து செல்கின்ற தன்மையினைக் காணலாம். இவ்வாறான தன்மையினால் இந்த விடயமானது அனைவரினையும் சிந்திக்க வைக்கின்ற விடயமாக மாறியிருக்கின்றது. எனவே மூன்று நோக்கங்களை முன்வைத்து இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவையாவன:

1. அரச, அரச சார்பற்ற, தனியார் மற்றும் சமுதாயத்தினை அடிப்படையாகக்கொண்ட நிறுவனங்களின் அனர்த்தத்திற்கு முன்னரான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளில் மற்றும் அனர்த்தத்திற்குப் பின்னரான பொறுப்பளித்தல் நடவடிக்கைகளில் அவற்றின் பங்களிப்பினை அறிந்துகொள்ளல்.
2. அனர்த்த முகாமைத்துவச் செயற்பாடுகளில் ஈடுபடும் நிறுவனங்கள் எதிர்கொள்ளும் சவால்களை அடையாளங்காணல்.
3. அனர்த்த முகாமைத்துவச் செயற்பாடுகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்கான அபிவிருத்தித் திறமுறைகளை முன்வைத்தல்.


என்பவற்றை நோக்காகக்கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளமை பிரதானமானதாகும்.

**4.0 ஆய்வுப் பிரதேசம்**

இலங்கையின் 25 மாவட்டங்களில் இது ஒன்றாகும். இது நாட்டின் வட பகுதியில் அமைந்துள்ளது. வட மாகாணத்தைச் சேர்ந்த ஓர் மாவட்டமாகும். வட மாகாணத்தின் நிர்வாகத் தலைநகரமாகவும் இது காணப்படுகின்றது. மேற்கில் மன்னார் வளைகுடாவும், வடக்கிலும் கிழக்கிலும் இந்தியப் பெருங்கடலும், தெற்கில் யாழ்ப்பாணக் கடல் நீரேரியாலும் சூழப்பட்டுள்ளது. இம் மாவட்டத்திற்குள் இருக்கும் தொண்டமானாறு, உப்பாறு போன்ற கடல் நீரேரிகளால் இம் மாவட்டம் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் என்பன ஆகும். சனத்தொகைச் செறிவு கொண்ட மாவட்டமாகும். ஐந்து மாவட்டங்களையும் 8848.11 ச.கி.மீ பரப்பளவையும் கொண்டது.

**படம் : 01**

**ஆய்வுப் பிரதேசம்**




மூலம் :- மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

**5.0 ஆய்வு முறையியல்**

இவ் ஆய்வின் நோக்கங்களை ஆய்வு செய்து நிறுவும் பொருட்டு விபரணப் புள்ளிவிபரவியல் பகுப்பாய்வு முறை (Descriptive Statistical Analysis method) பயன்படுத்தப்பட்டுள்ளது.

பிரதேச செயலகர் பிரிவுகளுக்கு நேரடியாகச் சென்று கலந்துரையாடல் மூலமும் வினாக்கொத்துக்கள் மூலமும் தகவல்கள் பெறப்பட்டன. அந்தவகையில் 150 வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டன. கொடுக்கப்பட்ட வினாக்கொத்தானது

- நிறுவனம் தொடர்பான பொதுவான தகவல்கள்
- அனர்த்த முகாமைத்துவச் செயற்பாடுகளுக்கான திட்டமிடல்
- அனர்த்த முகாமைத்துவச் செயற்பாடுகளுக்கான வளங்கள்
- அனர்த்த முகாமைத்துவச் செயற்பாடுகளினை நடைமுறைப்படுத்துகின்ற தன்மை
- அனர்த்த முகாமைத்துவச் செயற்பாடுகளுக்கான கொள்கைகளும் நியமங்களும்
- அனர்த்த முகாமைத்துவச் செயற்பாடுகளில் அவசர நிலை, தற்காலிக, நிரந்தர புனர்வாழ்வுச் செயற்பாடுகள்

போன்ற விடயங்களினை உள்ளடக்கியதாக அமைந்தது. ஒவ்வொரு நிறுவனங்களிலும் உள்ள அனர்த்த முகாமைத்துவச் செயற்பாடுகளுக்குப் பொறுப்பானவர்களுக்கு வழங்கப்பட்டு, தரவுகள் பெறப்பட்டிருக்கின்றன.

அரச நிறுவனங்கள் எனும்போது தேசிய மற்றும் மாவட்ட நிலையிலான அனர்த்த முகாமைத்துவப் பிரிவுகளுக்கும், ஆய்வுப் பிரதேசத்திலுள்ள பிரதேச செயலகர் பிரிவுகளுக்கும், மாநகர சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை, நீர் வழங்கல் அதிகார சபை, நகர அபிவிருத்தி அதிகார சபை, வானிலை அவதானிப்பு நிலையம், சுகாதார திணைக்களம் போன்ற நிறுவனங்களிடமிருந்து தகவல்கள் பெறப்பட்டன. அரச சார்பற்ற நிறுவனங்கள் எனும்போது இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், கியூடெக்,Sond, TRRO,

ZOA, World vision போன்ற நிறுவனங்களிடம் தகவல்கள் பெறப்பட்டன. தனியார் நிறுவனங்கள் எனும்போது வர்த்தக சங்கங்களிடமும் சமுதாயத்தினை அடிப்படையாகக்கொண்ட நிறுவனங்களிடமும் தகவல்கள் பெறப்பட்டன.

இடம் சார்ந்த மற்றும் இடம் சாராத தரவுகள் நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் இடம் சார் தரவுகளாகவும், இடம் சாராத தரவுகளில் முதல் நிலைத் தரவுகளாக அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் அனர்த்த முகாமைத்துவச் செயற்பாடுகளின் விபரங்கள், அனர்த்தங்கள் ஏற்படுவதற்கான காரணங்கள், அனர்த்தத்தினைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் என்பனவும், இரண்டாம் நிலைத் தரவுகளாக அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளில் ஈடுபடும் நிறுவனங்கள் தொடர்பாகவும் பெறப்பட்டுள்ளன. மற்றும் அச்சுருவான, அச்சுருவற்ற தகவல்கள், பிரதேச செயலகா் பிரிவுகள் என்பவற்றால் வெளியிடப்பட்ட கைந்நூல்கள், பிரதேச மலர்கள், குறிப்புக்கள் என்பவற்றிலிருந்தும் தரவுகள் பெறப்பட்டன.


ஆய்வு நடவடிக்கைகளின் பொருட்டு பல்வேறு முறைகளின் கீழ் திரட்டிய தரவுகள், தகவல்களை பல பகுதிகளாகப் பிரித்து, வகைப்படுத்தி, ஒதுக்க வேண்டியவற்றை ஒதுக்கி, தேவையானவற்றைத் தரப்படுத்தி, முறைப்படுத்தி, வகைப்படுத்தி, பட்டியற்படுத்தப்பட்டு, எண் வடிவிலோ அல்லது வரைபட வடிவிலோ காட்டுவதற்கு விபரணப் புள்ளிவிபரவியல்ப் பகுப்பாய்வு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது.

**6.0 ஆய்வு முடிவுகள்**

இயற்கையின் பெரும் சீற்றங்களான பூமியதிர்ச்சி, எரிமலைக் கக்குகை, சூறாவளி, சுனாமிப் பேரலை, வெள்ளப்பெருக்கு, மண்சரிவு, நில வழுக்குகை போன்ற இடர்களின் எழுச்சியை எந்தவொரு சக்தியாலும் தடுத்து நிறுத்திவிட முடியாதெனினும் இவற்றின் எழுச்சியைக் கண்காணித்து எச்சரிக்கை விடுத்து, பெறுமதிமிக்க உயிர்களைக் காவு கொள்ளாது இழப்புக்களையும், இன்னல்களையும், சேதங்களையும் இயன்றளவிற்கு குறைத்து இழிவளவாக்கிக்கொள்ள முடியும். இவ்வாறு அனர்த்தங்களினால் ஏற்படும் பாதிப்புக்களைக் குறைத்துக்கொள்வதற்கு அனர்த்த முகாமைத்துவம் என்பது இன்றியமையாத விடயமாக உள்ளது. அனர்த்தமானது ஏற்படுவதற்கு முன்னர் பாதிப்புக்களைக் குறைத்துக்கொள்வதற்காக மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கை அனர்த்த முகாமைத்துவம் எனப்படும். (Srivastaval, 2006)

அனர்த்த முகாமைத்துவமானது கொள்கை, நிர்வாக ரீதியான தீர்மானங்களினுடைய ஒரு பகுதியாகவும் அதேநேரம் அனர்த்தத்தோடு சம்மந்தப்பட்ட அனைத்து கட்டங்களிலும் சம்மந்தப்படுகின்ற பல்வேறுபட்ட பிரிவுகளினையும், செயற்பாடுகளையும் தன்னகத்தே கொண்டிருக்கின்றது. (P.C.Singa, 2008) இந்தப் பிரிவுகளானவை ஒரு வட்ட ஒழுங்கில் செயற்படுவதைக் காணலாம்.

**படம்: 02, அனர்த்த முகாமைத்துவ வட்டம்**




(Welfare camps emergency, pa, 21)

இந்த ஒழுங்கமைப்பினை பிரதானமாக இரண்டு வகைப்படுத்தலாம். அதாவது

1. அனர்த்தத்திற்கு முன்னரான முன்னேற்பாடுகள் (preparation)
2. அனர்த்தத்திற்குப் பின்னரான பொறுப்பளித்தல் (Response)

ஆகிய நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. முன்னேற்பாடுகள் (preparation) என்ற நடவடிக்கைக்குள் தடுத்தல் (Preventioṅ), குறைத்தல் (Mitigation), தயார்ப்படுத்தல் (Preparedness) என்ற அம்சங்களும், பொறுப்பளித்தல் (Response) என்ற நடவடிக்கைக்குள் உடனடி நிவாரணம் (Relife), புனர்வாழ்வு (Rehabilitation), புனரமைப்பு (Reconstruction) என்ற அம்சங்களும் உள்ளடங்குகின்றன.

அனர்த்தத்திற்கு முன்னரான முன்னேற்பாடுகள் (preparation) என்ற அம்சத்தினுள் பல விடயங்கள் உள்ளன. தடுத்தல் (Prevention) என்பது இயற்கை மற்றும் மனித நிகழ்வுகளால் ஏற்படுகின்ற அவசர நிலைக்கு இட்டுச்செல்வதில் இருந்து தடுப்பதற்காக வடிவமைக்கப்படும் நடவடிக்கைகளை உள்ளடக்குகின்றது. இந்த தடுத்தல் செயற்பாடு ஆபத்து நிலை பகுப்பாய்வு அடிப்படையில் அனர்த்தங்களினால் ஏற்படும் பாதிப்புக்களைக் குறைக்க நீண்ட கால, குறுங்கால கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குவதனை உள்ளடக்கி இருக்கின்றது. மேலும் பொதுவேலை, பொதுக்கட்டடங்கள், நகரத் திட்டமிடல் பௌதீகத்துடன் தொடர்புடைய பரப்புக்கள் போன்ற பகுதிகளில் சட்ட ரீதியான ஒழுங்கு விதிகளுடன் தொடர்புடையது.

குறைத்தல் (Mitigation), என்பது அனர்த்தமானது இடம்பெறும்பொழுது அனர்த்தத்தினால் ஏற்படும் பாதிப்புக்களினைக் குறைப்பதற்கான ஒரு முறையாகும். நீண்ட காலத்திற்கு ஆபத்தினைக் குறைக்கின்ற நடவடிக்கையாக இது இருக்கின்றது.

தயார்ப்படுத்தல் (Preparedness), என்பது அனர்த்தங்களினால் ஏற்படும் பாதிப்பினைக் குறைத்துக்கொள்வதற்காக மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகளினைக் குறிக்கின்றது. அனர்த்தத்துடன் தொடர்புபட்ட வகையில் வினைத்திறனான பாதுகாப்பு அளித்தல், நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளல், காலத்திற்குக்காலம் வசதி அளிக்கக்கூடியதும், ஒழுங்குபடுத்தப்பட்டதும், அழிவை அல்லது இழப்பைக் குறைப்பதற்குரிய நடவடிக்கையினை குறிக்கின்றது. இந்த செயற்பாடானது பொது மக்களிற்கு பயிற்சி அளித்தல், முன் எச்சரிக்கை செய்தல், செயற்பாட்டுத் திட்டங்களைத் தயாரித்தல், நிவாரணக் குழுக்களை உருவாக்கல், அவசர நிதியினைத் திரட்டுதல் என்பவற்றுடன் தொடர்புடையது.

அனர்த்தத்திற்குப் பின்னரான பொறுப்பளித்தல் (Response) நடவடிக்கையினுள்ளும் பல விடயங்கள் உள்ளன. உடனடி நிவாரணம் (Relief) என்றால் அனர்த்தத்தின் பின் உடனடியாக மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடாகும். அதாவது அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்டெடுத்து பாதுகாப்பான இடத்திற்கு கொண்டுசெல்லல், அவர்களுக்கு தேவையான உணவு, உடை, வதிவிடம் மற்றும் நீர், மருத்துவ வசதிகள் போன்றவற்றினை வழங்குதலைக் குறிக்கின்றது.

புனர்வாழ்வு (Rehabilitation), என்பது அனர்த்தத்தின் பின் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகள், தீர்மானங்கள் என்பவற்றினை உள்ளடக்கி இருக்கின்றது. அத்துடன் பாதிக்கப்பட்ட மக்களை தொடர்ந்தும் இப் பாதிப்பிலிருப்பதனைத் தவிர்த்து அவர்களை உற்சாகப்படுத்துகின்ற செயற்பாடுகளினையும், அவர்களை முன்பிருந்த நிலைக்கு கொண்டுவருவதற்கான வசதி வாய்ப்புக்களையும் ஏற்படுத்துவதனை குறிக்கும். குறிப்பாக அவசியமான சேவைகளினை வழங்குதல், தொழிற்பாடுகளை மீள ஆரம்பித்தல், சுய தொழில் முயற்சிகள் மற்றும் வதிவிடங்கள், சமூதாயத்திற்கு அவசியமான சேவைகளை வழங்கும் கட்டடங்களினைச் சரி செய்தல், பொருளாதார முயற்சிகளுக்கான உதவிகள் என்பனவற்றை உள்ளடக்கியுள்ளது.

புனரமைப்பு (Reconstruction), என்பது புனர்வாழ்வினைத் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடாகும். அதாவது குறித்த சமூகமானது நிலைத்திருப்பதற்கு அவசியமான வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதனை குறித்து நிற்கின்றது. குறிப்பாக பாதிக்கப்பட்ட அடிப்படைக் கட்டுமானங்கள், உட் கட்டமைப்பு வசதிகள், பொருளாதாரக் கட்டமைப்புக்கள் போன்றவற்றினை நிரந்தரமாக மீள் நிர்மானம் செய்கின்ற நடவடிக்கைகள் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த செயற்பாடானது நடந்துகொண்டிருக்கின்ற நீண்ட கால அபிவிருத்தித் திட்டங்களுடன் இணைந்ததாகவும் எதிர்காலத்தில் ஏற்படும் அபாயத் தன்மைகளையும் கருத்திற் கொண்டிருக்க வேண்டும்.

இத்தகைய செயற்பாடுகளை கொண்டமைந்ததாக அனர்த்த முகாமைத்துவம் என்பது அமைந்திருக்கின்றது. இந்த செயற்பாட்டிற்கு நிறுவனங்களின் பங்களிப்பு என்பது இன்றியமையாத விடயமாக இருக்கின்றது.

ஆகவே ஆய்வுப் பிரதேசத்தில் அனர்த்தத்திற்கு முன்னரான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளில் அரச, அரச சார்பற்ற, தனியார் மற்றும் சமுதாயத்தினை அடிப்படையாகக்கொண்ட நிறுவனங்களின் பங்களிப்புக்களில் திட்டமிடல் நடவடிக்கைகளினை நோக்கும்போது அரச, அரச சார்பற்ற நிறுவனங்களும் தான் திட்டமிடல், திட்டத் தயாரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற அதேநேரம், குறித்த ஒரு நிறுவனமானது தனியொரு திட்டத்தினைத் தயாரிக்காது பல திட்டங்களினைத் தயாரிக்கின்ற தன்மையினைக் காணலாம். மேலும் திட்டங்களினைத் தயாரிக்கின்றபொழுது ஒன்றிணைந்து தயாரிக்காது தமக்குத் தமக்கென திட்டங்களினைத் தயாரிக்கின்ற தன்மையினைக் காணலாம். தனியார், சமுதாயத்தினை அடிப்படையாகக்கொண்ட நிறுவனங்களும் திட்டத் தயாரிப்பில் ஈடுபடாத நிலமை இருக்கின்றன. அத்துடன் அரச நிறுவனங்களில் நகர அபிவிருத்தி அதிகார சபை, மாநகர சபை போன்ற முக்கிய நிறுவனங்கள் பங்குபற்றாத நிலமையும் காணப்படுகின்றது. எனவே இவ்வாறு ஒருங்கிணைவற்ற செயற்பாட்டினைத் தவிர்த்து அனைத்து நிறுவனங்களையும் இணைத்து ஒருங்கிணைந்து திட்டங்களினைத் தயாரிக்கின்ற தன்மைகள் உருவாக்கப்பட வேண்டும். இவற்றினை கீழ்வரும் அட்டவணையின் ஊடாக தெளிவுபடுத்த முடியும்.

**அட்டவணை: 01, திட்டமிடல் செயற்பாடுகளில் ஈடுபடும் நிறுவனங்கள்**

| நிறுவனங்கள் | எண்ணிக்கை | தயாரிக்கின்ற திட்டங்களின் வகை | | |
|---|---|---|---|---|
| | | குறுங்காலம் | நடுத்தர காலம் | நீண்ட காலம் |
| அரச நிறுவனங்கள் | 17 | 05 | 09 | 03 |
| அரச சார்பற்ற நிறுவனங்கள் | 15 | 06 | 06 | 03 |
| தனியார் நிறுவனங்கள் | - | - | - | - |
| சமுதாயத்தினை அடிப்படையாகக் கொண்ட நிறுவனங்கள் | - | - | - | - |

(மூலம்: கள ஆய்வு, 2012)

அடுத்து அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகளுக்குத் தேவையான பௌதீக வளங்களினைக் கொண்டிருக்கும் தன்மையினை நோக்குகின்றபோது திடீர் தேவைகளுக்கான வாகனங்கள், தொலைத் தொடர்பு சாதனங்கள், அவசர சிகிச்சை வசதிகள் மற்றும் ஏனைய உபகரணங்களினை உள்ளடக்கி இருக்கின்றது. அரச நிறுவனங்களில் 94%மான நிறுவனங்கள் பற்றாக்குறையான பௌதீக வளத்தினைக் கொண்டிருக்கின்றன. வீதி அபிவிருத்தி அதிகார சபை தான் போதுமான அளவு பௌதீக வளங்களினைக் கொண்டிருக்கின்றன. வாடகைக்கு அமர்த்தக்கூடிய வசதி வாய்ப்பு இந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. அதேநேரம் அரச சார்பற்ற நிறுவனங்களில் பற்றாக்குறையான பௌதீக வளத்தினை 78% மான நிறுவனங்கள் கொண்டிருக்கின்றன. இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், உலக உணவு நிகழ்ச்சித் திட்டம் போன்றன போதுமான அளவு பௌதீக வளத்தினைக் கொண்டிருக்கின்றன. இந் நிறுவனங்களானவை பற்றாக்குறையான பௌதீக வளத்தினை சர்வதேச நன்கொடைகள், ஏனைய நாட்டு அரசாங்கங்கள், சர்வதேச வங்கிகள் போன்றவற்றில் இருந்து பெற்றுக்கொள்கின்றன. இதனை கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 2**
**பௌதீக வளங்களினைக் கொண்டிருக்கும் தன்மை**

| நிறுவனங்கள் | போதுமான அளவு(%) | பற்றாக்குறை (%) |
|---|---|---|
| அரச நிறுவனங்கள் | 10 | 90 |
| அரச சார்பற்ற நிறுவனங்கள் | 27 | 73 |
| தனியார் நிறுவனங்கள் | - | - |
| சமுதாயத்தினை அடிப்படையாகக் கொண்ட நிறுவனங்கள் | - | - |

(மூலம் :- கள ஆய்வு, 2012)

நிறுவனங்களின் நிதி வளத்தினை நோக்குகின்றபோது அரச நிறுவனங்கள், சமுதாயத்தினை அடிப்படையாகக் கொண்ட நிறுவனங்கள் அரச நிதி மூலதனத்தினையும், அரச, அரச சார்பற்ற நிறுவனங்களானவை சர்வதேச மூலதனத்தையும் தனியார் நிறுவனம் தமது சொந்த நிதியினையும் நிதி மூலமாகக் கொண்டிருக்கின்ற தன்மையினைக் காணலாம். இதனால் இந் நிதி மூலங்களானவை பற்றாக்குறையாகவே இருக்கின்றன. இப் பற்றாக்குறையினை சர்வதேச நன்கொடைகள், ஏனைய நாட்டு அரசாங்கங்கள், சர்வதேச வங்கிகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் போன்றவற்றிலிருந்து பெற்றுக்கொள்கின்றன.

அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான வல்லுனர்களினை நிறுவனங்கள் கொண்டிருக்கும் தன்மையினை நோக்கினால் அரச நிறுவனங்களானவை 54% மானவையும், அரச சார்பற்ற நிறுவனங்களில் 88% மான வல்லுனர்களையும் கொண்டிருக்கின்றனர். 46% அரச நிறுவனங்களும்,12% அரச சார்பற்ற நிறுவனங்களும் வல்லுனர்களைக் கொண்டிருக்காத தன்மையினைக் காணலாம். அத்துடன் அனர்த்த முகாமைத்துவம் சார்ந்த ஊழியர்கள் அனர்த்த முகாமைத்துவத் துறையில் தேர்ச்சி குறைந்தவர்களாக இருக்கின்ற தன்மையினைக் காணலாம். இந்நிலையில் நிறுவனங்களுக்குப் பொருத்தமான ஆளணியினரை நியமிப்பதுடன் அவர்களுக்கு அவசியமான பயிற்சி நடவடிக்கைகளினை காலத்திற்குக் காலம் வழங்க வேண்டிய தேவை உள்ளது. கீழ்வரும் அட்டவணை இதனை தெளிவுபடுத்துவதை அவதானிக்கலாம்.

**அட்டவணை 3**

**அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான வல்லுனர்களினை நிறுவனங்கள் கொண்டிருக்கும் தன்மை**

| நிறுவனங்கள் | எண்ணிக்கை | |
|---|---|---|
| | கொண்டிருத்தல் | கொண்டிராமை |
| அரச நிறுவனங்கள் | 10 | 07 |
| அரச சார்பற்ற நிறுவனங்கள் | 13 | 02 |
| தனியார் நிறுவனங்கள் | - | - |
| சமுதாயத்தினை அடிப்படையாகக் கொண்ட நிறுவனங்கள் | - | - |
| சதவீதம் | 61% | 37% |

(மூலம்: கள ஆய்வு, 2012)

அனர்த்த முகாமைத்துவச் செயற்பாடுகளில் தயார்ப்படுத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடும் நிறுவனங்கள் 61% மாகவும்,ஈடுபடாத நிறுவனங்களாக 37% மாகவும் இருக்கின்றது. அரச துறையின் பங்களிப்பினை விட அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பு அதிகமாகவிருக்கின்றது. இதில் குறிப்பாக இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் தொண்டர் படையினரை உருவாக்குதல், அவர்களுக்குப் பயிற்சிகளை வழங்குதல், சமுதாய உறுப்பினர்களுக்கு பயிற்சிகளை வழங்குதல் போன்ற பல நடவடிக்கைகளினை திறம்பட மேற்கொள்கின்ற தன்மையினைக் காணலாம். இந்த நடவடிக்கைகளிலும் நிறுவனங்களானவை தனித்தனியாக தொண்டர் படையினை உருவாக்குதல், பயிற்சி அளித்தல் போன்ற செயற்பாடுகளைத் தனித்தனியான கட்டமைப்புக்களில் முன்னெடுத்துச் செல்வதைக் காணலாம். இதனால் ஒரு பிரதேசத்தில் பல குழுக்கள் உருவாவதற்கான சந்தர்ப்பங்கள் உருவாகின்றன. இதனைவிடுத்து ஒரு பிரதேசத்திற்குப் பொதுவான ஒரு தொண்டர் படையினை எல்லா நிறுவனங்களும் ஒருங்கிணைந்து உருவாக்கி, அவர்களுக்கு தேவையான அனைத்துப் பயிற்சிகளையும் வழங்க வேண்டும்.

மேற்கூறப்பட்ட விடயங்கள் அனைத்தும் அனர்த்தங்களுக்கு முன்னரான முகாமைத்துவச் செயற்பாடுகளாக அமைகின்றது. அடுத்து அனர்த்தத்திற்குப் பின்னரான முகாமைச் செயற்பாடுகளை நோக்குவோம். அனர்த்தம் நிகழ்ந்த பின்னர் பொது இடங்களில் தங்கியுள்ளவர்களுக்கு வழங்கும் பொருட்களில் நிறுவனங்களின் பங்களிப்பினை நோக்கின், இந் நடவடிக்கைகளில் அரச நிறுவனங்கள் 53%ஈடுபடுகின்ற அதேநேரம்,47%மானவை பங்களிக்காத தன்மையினைக் காணலாம். சமைத்த உணவு கூடுதலாக அரச நிறுவனங்களினால் வழங்கப்படுகின்ற தன்மையினைக் காணலாம். அரச சார்பற்ற நிறுவனங்களில் 68%மான நிறுவனங்கள் ஈடுபடுகின்ற அதேநேரம் 47%மான நிறுவனங்களானவை பங்களிக்காத தன்மையும் காணப்படுகின்றது. இங்கு உலர் உணவானது உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக வழங்கப்படுகின்ற தன்மையினைக் காணலாம். தனியார் நிறுவனங்கள் 40% நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற அதேநேரம் சமுதாயத்தினை அடிப்படையாகக்கொண்ட நிறுவனங்களின் பங்களிப்பானது

00%ஆக இருப்பதனைக் காணலாம். இவற்றினைக் கீழ்வரும் அட்டவணை மற்றும் வரைபடம் மூலமாக விளங்கிக்கொள்ள முடியும்.

**அட்டவணை 4**

**பொது இடங்களில் தங்கியுள்ளவர்களுக்கு வழங்கும் பொருட்களில் நிறுவனங்களின் பங்களிப்பு**

| வழங்கப்படும் பொருட்கள் | நிறுவனங்கள் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | அரச நிறுவனங்கள் | | அரச சார்பற்ற நிறுவனங்கள் | | தனியார் நிறுவனங்கள் | | சமுதாயத்தினை அடிப்படையாகக்கெ ாண்ட நிறுவனங்கள் | |
| | ✓ | ● | ✓ | ● | ✓ | ● | ✓ | ● |
| சமைத்த உணவு | 09 | 08 | 08 | 01 | 02 | - | - | 01 |
| உலர் உணவு | 09 | 08 | 08 | 01 | 02 | - | - | 01 |
| பால் மா | 09 | 08 | 08 | 03 | - | - | - | 01 |
| படுக்கை விரிப்பு | 09 | 08 | 08 | 03 | - | - | - | 01 |
| சமையல் பொருட்கள் | 09 | 08 | 08 | 02 | - | - | - | 01 |
| குளியல் சாதனங்கள் | 10 | 07 | 05 | 03 | - | - | - | 01 |
| சதவீதம் | 53% | 47% | 68% | 22% | 40% | 60% | 0% | 100% |

(மூலம்: கள ஆய்வு, 2012)

| | |
|---|---|
| ✓ ஈடுபடுதல் | ● ஈடுபடாமை |

மேலும் அனர்த்த முகாமைத்துவச் செயற்பாடுகளில் புனர்வாழ்வு நடவடிக்கைகளாக தற்காலிக வதிவிடங்களை அமைத்துக் கொடுத்தல், அடிப்படை சுகாதார வசதியினை ஏற்படுத்திக் கொடுத்தல், உலர் உணவுப் பொருட்களினை வழங்கல் போன்ற செயற்பாடுகளில் 50% ற்கு மேற்பட்ட பங்களிப்பினை நிறுவனங்களானவை வழங்குகின்ற அதேநேரம் மருத்துவ வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், குடி நீர் வசதியினை ஏற்படுத்திக்கொடுத்தல் போன்ற செயற்பாடுகளில் நிறுவனங்களின் பங்களிப்பு 50% க்கு குறைவாக இருக்கின்ற தன்மையினைக் காணலாம். இதற்குக் காரணம் குறித்த பிரதேசம் கொண்டுள்ள வள வாய்ப்புக்கள் முறையாக அடையாளங் காணப்பட்டு, தேவைப்படுகின்ற நேரத்தில் பயன்படுத்தக் கூடியவாறு ஒழுங்குபடுத்தல்களை மேற்கொள்ளாமையே ஆகும். ஆகவே இதனைத் தவிர்த்து ஒழுங்குபடுத்த வேண்டிய தேவை காணப்படுகின்றது.

மீள் கட்டுமான நடவடிக்கைகளில் நிறுவனங்களின் பங்களிப்பினை நோக்கும்போது 59% மான நிறுவனங்கள் ஈடுபடுகின்ற அதேநேரம் 41% ஆன நிறுவனங்களானவை ஈடுபடாத தன்மையும் காணப்படுகின்றது. ஆனால் இந்த செயற்பாட்டினை நிறுவனங்களானவை பகுதி பகுதியாக மேற்கொள்கின்ற அதேநேரம் குறித்த செயற்பாட்டினைச் செய்வதனால் பூரணத்தன்மை கிடைக்கும் எனக் கருதினால் மட்டும்தான் அரச சார்பற்ற நிறுவனங்களானவை ஈடுபடுகின்ற தன்மையினைக் காணலாம். சேதமடைந்த வீடுகளை திருத்திக்கொடுத்தல், புதிதாக வீடுகளை அமைத்துக் கொடுத்தல், பாதிப்புக்கு உள்ளான உட்கட்டுமானங்களினை மீள திருத்துதல், பொது மண்டபங்கள், பொதுக் கிணறுகள், மலசல கூட வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற மீள் கட்டுமான நடவடிக்கைகளில் குறித்த நிறுவனங்கள் ஈடுபடுவதைக் காணலாம். இதனைக் கீழ்வரும் அட்டவணையின் ஊடாக தெளிவுபடுத்த முடியும்.

**அட்டவணை: 5**

**மீள் கட்டுமான நடவடிக்கைகளில் நிறுவனங்களின் பங்களிப்பு**

| நிறுவனங்கள் | எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|
| மீள் கட்டுமான நடவடிக்கைகளில் ஈடுபடும் நிறுவனங்கள் | 18 | 56.25% |
| மீள் கட்டுமான நடவடிக்கைகளில் ஈடுபடாத நிறுவனங்கள் | 14 | 43.75% |

(மூலம்: கள ஆய்வு, 2012)

மேற்குறித்த அனர்த்த முகாமைத்துவச் செயற்பாடுகளினை மேற்கொள்ளும் நிறுவனங்களினைத் தொகுத்து நோக்கின்,59% அரச நிறுவனங்களும்,31% அரச சார்பற்ற

நிறுவனங்களும்,6.5% தனியார் நிறுவனங்களும்,3.5% சமுதாயத்தினை அடிப்படையாகக் கொண்ட நிறுவனங்களும் ஈடுபடுகின்றமையைக் காண முடிகின்றது. ஆனால் அரச சார்பற்ற நிறுவனங்களின் எந்தவொரு செயற்றிட்டத்தினையும் முன்னெடுக்கின்றபோது அதற்குள் அனர்த்த முகாமைத்துவம் பற்றிய செயற்பாடுகளினையும் உள்ளடக்குகின்ற தன்மையினைக் காணலாம். ஏனெனில் இப் பிரதேசங்களில் ஏற்படுகின்ற சூறாவளி, புயற்காற்று, சுனாமி போன்ற அனர்த்தங்களானவை அனர்த்தங்கள் பலவற்றைத் தோற்றுவிக்கக்கூடிய சந்தர்ப்பம் அதிகமாக இருப்பதால் அனர்த்த முகாமைத்துவச் செயற்பாடுகளினை முன்னெடுக்க வேண்டிய தேவை நிறுவனங்களுக்கு இருக்கின்றது. கீழ்வரும் அட்டவணை மற்றும் வரைபடம் என்பன அனர்த்த முகாமைத்துவச் செயற்பாடுகளினை மேற்கொள்ளும் நிறுவனங்களின் விபரங்களைக் காட்டுகின்றது.

**அட்டவணை: 6**


**அனர்த்த முகாமைத்துவச் செயற்பாடுகளினை மேற்கொள்ளும் நிறுவனங்களின் சதவீதம்**

| நிறுவனங்கள் | சதவீதம் |
|---|---|
| அரச நிறுவனங்கள் | 59% |
| அரச சார்பற்ற நிறுவனங்கள் | 31% |
| தனியார் நிறுவனங்கள் | 6.5% |
| சமுதாயத்தினை அடிப்படையாகக்கொண்ட நிறுவனங்கள் (CBO) | 3.5% |

(மூலம்: கள ஆய்வு, 2012)

**வரைபடம்: 1**

**அனர்த்த முகாமைத்துவச் செயற்பாடுகளினை மேற்கொள்ளும் நிறுவனங்களின் சதவீதம்**




மேலும் அனர்த்த முகாமைத்துவச் செயற்பாடுகள் சார்ந்து நிறுவனங்களின் பங்களிப்புத் தன்மையினை ஒட்டுமொத்தமாக நோக்கின், நிவாரண நடவடிக்கைகளில் 86% ஆனவையும், தடுத்தல் நடவடிக்கைகளில் 69% ஆனவற்றினையும், குறைத்தல், தயார்ப்படுத்தல் நடவடிக்கைகளில் 69%மான நிறுவனங்கள் பங்காற்றுகின்றன. எனினும் அனர்த்த முகாமைத்துவச் செயற்பாடுகளானவை 100%மான பூர்த்தித் தன்மையினைக் கொண்டிருக்க வேண்டும். இத்தன்மை ஆய்வுப் பிரதேசத்தில் குறைவாகக் காணப்படுகின்றது. கீழ்வரும் அட்டவணை மற்றும் வரைபடம் என்பன அனர்த்த முகாமைத்துவச் செயற்பாடுகள் சார்ந்து நிறுவனங்களின் பங்களிப்பு விபரங்களைக் காட்டுகின்றது.

**அட்டவணை: 07**


**அனர்த்த முகாமைத்துவச் செயற்பாடுகள் சார்ந்து நிறுவனங்களின் பங்களிப்பு**

| நிறுவனங்கள் | எண்ணிக்கை | | | | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| | அரச நிறுவனம் | அரச சார்பற்ற நிறுவனம் | தனியார் நிறுவனம் | ச.அ. நிறுவனம் | |
| நிவாரண நடவடிக்கை | 13 | 09 | 02 | 01 | 86% |
| புனர்வாழ்வு | 13 | 04 | 00 | 01 | 62% |
| புனரமைப்பு | 12 | 05 | 00 | 00 | 59% |
| தடுத்தல் | 15 | 05 | 00 | 00 | 69% |
| குறைத்தல் | 13 | 07 | 00 | 00 | 69% |
| தயார்ப்படுத்தல் | 14 | 06 | 00 | 00 | 69% |

(மூலம்: களஆய்வு, 2012)

**வரைபடம்: 2**

**அனர்த்த முகாமைத்துவச் செயற்பாடுகள் சார்ந்து நிறுவனங்களின் பங்களிப்பு**




மேலும் இப்பிரதேசத்தில் தடுத்தல், குறைத்தல் நடவடிக்கைகளானவை அனர்த்தம் ஏற்படுகின்றபோது தான் முன்னெடுக்கப்படுகின்ற தன்மையைக் காணலாம். இதனால் குறித்த நிறுவனங்களானவை அனர்த்தமானது வரும்போது மட்டும் செயற்படாமல் அனர்த்தத்தின் முன்னர், மற்றும் பின்னரான முகாமைத்துவ நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

எனவே ஆய்வின் முதலாவது நோக்கமான "அரச, அரச சார்பற்ற, தனியார் மற்றும் சமுதாயத்தினை அடிப்படையாகக்கொண்ட நிறுவனங்களின் அனர்த்தத்திற்கு முன்னரான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளில் மற்றும் அனர்த்தத்திற்குப் பின்னரான பொறுப்பளித்தல் நடவடிக்கைகளில் அவற்றின் பங்களிப்பினை அறிந்துகொள்ளல்" என்பது அடையப்பட்டுள்ளது.

அடுத்து ஆய்வின் இரண்டாவது நோக்கமான "அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகளில்ஈடுபடும்நிறுவனங்கள் எதிர்கொள்ளும் சவால்களை அடையாளங்காணல்" என்பதனை நோக்கும்போது பல சவால்கள் ஆய்வுப் பிரதேசத்தில் அடையாளங் காணப்பட்டுள்ளன.

அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், சமுதாயத்தினை அடிப்படையாகக்கொண்ட நிறுவனங்கள் போன்ற பல நிறுவனங்களானவை தமது அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகளினை முன்னெடுக்கின்றபோது பல சவால்களை எதிர்கொள்கின்றன. அத்தகைய சவால்களாக,

- அரச நிறுவனங்களிடையே அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகளுக்காக அதிகாரக் கட்டமைப்பானது பரவலாக்கப்பட்டு இருந்தாலும் அதிகார அமைப்பு

என்பது மேலிருந்து கீழாகத்தான் செயற்பாட்டிலுள்ளது. அதாவது பின்வருமாறு இந்த அதிகாரக் கட்டமைப்பு காணப்படுகின்றது.

Disaster Management Centre
↓
District Disaster management Coordinator
↓
Divisional Level Committee
↓
GN Committee
↓
Village Level Committee

இந்த தன்மையினால் அனர்த்த காலத்தின்போது உரிய நடவடிக்கையினை மேற்கொள்வதற்கு இந்த அதிகாரக் கட்டமைப்பு தடையாகவுள்ளது. அத்துடன் நிதி தொடக்கம் ஏனைய விடயங்களும் மேலிடத்திலிருந்து வருவதினாலும் குறித்த செயற்பாட்டினைத் தாமதமாக மேற்கொள்ளவேண்டிய நிலை ஏற்படுகின்றது.

- இயற்கை மற்றும் மனித நிகழ்வுகளால் ஏற்படுகின்ற அனர்த்தப் பாதிப்புக்களை தடுப்பதற்காக வடிவமைக்கப்படும் நடவடிக்கைகள் முற்கூட்டியே ஒழுங்குபடுத்தப்படாமை. உதாரணமாக தரவுக்கட்டமைப்புக்கள் மற்றும் அனர்த்த பகுதிக்கான படமாக்கல் செயற்பாடுகள் உருவாக்கப்படாமை, இவற்றை கையாள்வதற்கான தொழில்நுட்ப அறிவு இன்மை.

- தடுத்தல் செயற்பாடு ஆபத்து நிலை பகுப்பாய்வு அடிப்படையில் அனர்த்தங்களினால் ஏற்படும் பாதிப்புக்களைக் குறைக்க நீண்ட கால, குறுங்கால கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் அனர்த்தம் ஏற்படக்கூடிய பிரதேசங்களுக்கு ஏற்ற முறையில் உருவாக்கப்படாமை.

- அனர்த்த முகாமைச் செயற்பாடுகளுக்கான நிதி வளம், ஆளணியினர் என்பன பற்றாக்குறையாக இருப்பதுடன், உரிய காலத்தில் இவற்றைப் பெற்றுக்கொள்ளமுடியாத நிலை காணப்படுகின்றது.

- அரச நிறுவனங்களிடையே அனர்த்த முகாமைத்துவத்திற்குரிய பதவிகளுக்கான நியமனங்களானவை கால தாமதமாக மேற்கொள்ளப்படுவதனால் அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகளினை வினைத்திறனான முறையில் மேற்கொள்ள முடியாத நிலமை ஏற்படுகின்றது.

- அரச நிறுவனங்களானவை தமது செயற்பாடுகளை முன்னெடுக்கும்போது அரசியல் தலையீடுகள் காணப்படுவதனால் நிறுவனங்களானவை தமது செயற்பாடுகளைச் சுதந்திரமாக மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது.

- தொடர்ந்தும் ஏற்படுகின்ற அனர்த்த நிலையினைக் கருத்திற்கொள்ளாது இடம்சார்ந்த அபிவிருத்தியைத் மேற்கொள்வதற்கு தொடர்புடைய நிறுவனங்கள் அனுமதி வழங்குவதனால் வினைத்திறனான முறையில் அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதுள்ளது. உதாரணமாக கட்டட நிர்மானத்துக்கு பொறுப்பான நிறுவனங்கள் சில சந்தர்ப்பங்களில் அனர்த்தங்கள் இடம்பெறும் இடங்களைக் கருத்திற்கொள்ளாது கட்டட நிர்மானத்துக்கான அனுமதியினை வழங்குவதனால் அனர்த்தங்கள் அதிகமாக ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் உருவாகின்றன.

- அனர்த்த முகாமைத்துவச் செயற்பாடுகளில் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் அனைத்தும் ஒருங்கிணைந்து செயற்படுகின்ற தன்மை மிகக் குறைவாகக் காணப்படுகின்றது. உதாரணமாக அரச நிர்வாகக் கட்டமைப்பானது அரச சார்பற்ற நிறுவனங்களை சுயமாக இயங்க விடாது தமது கட்டமைப்புக்களுக்கு ஊடாகவும்,பல்வேறு நிபந்தனைகளுடனும் செயற்பட விடுவதனால் ஒருங்கிணைந்து செயற்படுகின்ற தன்மை குறைவாகக் காணப்படுகின்றது.

- அனர்த்தங்களினால் ஏற்படுகின்ற இழப்புக்கள் மற்றும் சேத விபரங்கள் பற்றிய தகவல்களின் உண்மைத்தன்மை என்பது குறைவாகக் காணப்படுகின்றமையால் உதவி வழங்கும் நிறுவனங்கள் அனர்த்த முகாமைத்துவச் செயற்பாடுகளில் வினைத்திறனாக செயற்பட முடியாத நிலை காணப்படுகின்றது. அத்துடன் ஒரு தொகுதி மக்களே மீண்டும் மீண்டும் உதவிகளைப் பெற்றுக்கொள்கின்ற தன்மையும் காணப்படுகின்றது.

அடுத்து மூன்றாவது நோக்கமான ''அனர்த்த முகாமைத்துவச் செயற்பாடுகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்கான திறமுறைகளை முன்வைத்தல்'' என்பதற்கும் ஏற்கனவே அறியப்பட்ட நிறுவனங்களின் அனர்த்த முகாமைத்துவச் செயற்பாடுகள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற நிறுவனங்கள் தமது அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகளினை முன்னெடுக்கின்றபோதுஎதிர்கொண்ட சவால்களினையும் வைத்துக்கொண்டு அச்செயற்பாடுகள் வினைத்திறனாகச் செயற்பட மற்றும் நிறுவனங்களின் பங்களிப்பினைஅதிகரிக்கபலஅபிவிருத்தித்திறமுறைகளும்ஆய்வாளனால்முன்வைக்கப்பட்டுள்ளன.

அவ்வகையில்,

- அனர்த்த முகாமைத்துவக் கொள்கைகளினைச் சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்வதற்கு அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான கொள்கைகள் உருவாக்கப்பட வேண்டும். இக் கொள்கைகளானவை மாவட்ட, பிராந்திய, கிராம மட்டம் வரை சென்று, அந்தந்தமட்ட நிறுவனங்களினால் முன்னெடுக்கக்கூடியதாக அமைய வேண்டும்.

- அனர்த்த முகாமைத்துவச் செயற்பாடுகளைச் சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்வதற்கு எல்லா நிறுவனங்களும் ஒருங்கிணைந்து ஒரு தெளிவான திட்டம் ஒன்றை உருவாக்கப்படவேண்டும். இத்தகைய திட்டமானது முன்னெச்சரிக்கை முறைமை, விடுவிப்பதற்கான தந்திரோபாயங்கள், தரவுத் தள முகாமைத்துவம், பயிற்சிகள், ஆரம்ப சுகாதார கவனிப்பு, உலர் உணவுப் பொருட்களினை சேமித்து வைத்தல் போன்ற அம்சங்களினை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

- அனர்த்தம் ஏற்படும் இடங்களை அடையாளங்கண்டு, அனர்த்த அபாயப் படங்களை அவ்வப் பிரதேசங்களுக்குத் தயாரிக்க வேண்டும். அத்துடன் அனர்த்தங்கள் ஏற்படுகின்றபோது மக்களினைப் பாதுகாப்பாக தங்க வைக்கக்கூடிய இடங்களினையும் அடையாளப்படுத்த வேண்டும்.

- அனர்த்த ஆபத்து வரைபடத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தி, அனர்த்தம் ஏற்படும் பிரதேசங்களினை வலயமாக்கி அப் பிரதேசங்களுக்குப் பொருத்தமான நிலப் பயன்பாட்டு அம்சங்களினை ஒழுங்குபடுத்தி, அதற்கேற்ற வகையில் பொருத்தமான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் ஏனைய செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

- அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகளை மேற்கொள்ளும் நிறுவனங்கள் தமது வளப் பற்றாக்குறையை அடையாளங்கண்டு, அதற்கேற்ற வகையில் குறித்த நிறுவனங்களுக்கு அனர்த்த முகாமைத்துவச் செயற்பாடுகளை முன்னெடுக்கும் வகையில் வளங்களை முற்கூட்டியே திட்டமிட்டு ஒதுக்குதல் வேண்டும்.

- அனர்த்த முகாமைத்துவச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் நிறுவனங்கள் தனித்தனியாக அனர்த்த முகாமைத்துவக் குழுக்களை உருவாக்காது, ஒருங்கிணைந்து ஒவ்வொரு கிராமத்திற்கும் பொதுவான குழுக்களை உருவாக்கி பயிற்சிகள் வழங்கப்படல் வேண்டும்.

- சமுதாயத்தினை அடிப்படையாகக்கொண்ட நிறுவனங்களின் பங்களிப்புக்களை சரியான வழியில் அடையாளங்கண்டு, அனர்த்த முகாமைத்துவச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கேற்ற வகையில் குறித்த நிறுவனங்களின் இயலளவு அதிகரிக்கப்பட வேண்டும்.

- அனர்த்தங்கள் பற்றியும் அனர்த்த காலத்தின்போது எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது பற்றியும் பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துதல் வேண்டும்.

**1.6சிபாரிசு**

அனர்த்த முகாமைத்துவச் செயற்பாடுகளில் அரச, அரச சார்பற்ற மற்றும் சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்ட ஆர்வலர் சமூகங்கள் என்பன தேசிய, மாகாண, மாவட்ட, பிரதேச மற்றும் கிராமிய மட்டங்களில் ஈடுபட்டுவருகின்றபொழுதிலும் அனர்த்த முகாமைத்துவத்தொழிற்பாடுகளில்தொழில்நுட்பரீதியான அனைத்து செயற்பாடுகளினையும் UNDP, JICA போன்ற வேறு பல நிறுவனங்களின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவ்வாறான கட்டமைப்பினை இலங்கை கொண்டிருந்தாலும் ஐக்கிய நாடுகள் சபையானது உலக நாடுகள் அனைத்திற்கும் பொதுவாக அனர்த்த முகாமைத்துவக் குழுக்களை உருவாக்கி இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது. இந்த அமைப்பில் FAO, UNICEF, WHO, UNHER, UNDP போன்ற நிறுவனங்கள் செயற்பட்டு வருகின்றன. இலங்கையானது அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடாக இருப்பதனால் முற்று முழுதாக அனர்த்த முகாமைத்துவத் தொழிற்பாடுகளை முன்னெடுக்க முடியாததனால் அபிவிருத்தி அடைந்த நாடுகளின் நிறுவனங்களின் உதவியுடன் முன்னெடுக்கப்படுகின்ற தன்மையினைக் காணலாம். இவ்வாறான சந்தர்ப்பங்களில் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளை சரியான முறையில் யாருடன், எவ்வாறு, எதை மற்றும் யாருக்காக என்கின்ற கேள்விகளுக்கு பதிலளிக்கும் வகையில்அந்தந்தப் பிரதேசங்களின் பொறுப்பு வாய்ந்த பிரதிநிதிகளது மற்றும் நிறுவனங்களது பங்குவினைத்திறனானதாக அமைய வேண்டும்.

**உசாத்துணை நூல்கள்**


- Asian Development Bank (2005). "An initial assessment of the impact of the earthquake an tsunami of December 26th, 2004 on south and southeast Asia". Available from: http://www.adb.org/Documents/Others/Tsunami/impactearthquake-tsunami.pdf
- Massey J and Larsen J (2006). "Crisis Management in Real time: How to Successfully Plan for and Respond to a Crisis". *Journal of Promotion Management.* Vol (12): pp.3-14.
- Ministry of Disaster Management in Sri Lanka (2005). "Towards a Safer Sri Lanka: A Road Map for Disaster Risk Management". Available from: http://www.disastermin.gov.lk/web/
- Ministry of Disaster Management in Sri Lanka (2007). "Historical Disaster Information Systems in Sri Lanka". Available from: http://www.disastermin.gov.lk/web/
- Ministry of Disaster Management in Sri Lanka (2009). "Early Warning Systems and Emergency Telecommunications in Sri Lanka". Available from: http://www.disastermin.gov.lk/web/
- Ministry of Disaster Management and Human Rights in Sri Lanka (2012). "The role of Sri Lankan government towards disaster management". Available from: http://www.disastermin.gov.lk/web/index.php?lang=en
- National Institute of Mass Communication (NIMC) Dhaka – Bangladesh (2012). *Role of Media in Disaster Risk Reduction in South Asia.*Dhaka Publication.
- Charga,S. Lingbengb, Y.Wenchenc(2008), நிச்சயம் அற்றதன்மையின் கீழ் வெள்ள அனர்த்த சேவைகளினை தயார் செய்வதற்கான நிச்சயமற்ற தன்மைகளினை தவிப்பதற்கான ஓர் அணுகுமுறை: சூழல் முகாமைத்துவம், பக். 81, 465 – 480.